Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume 5, SPL Issue 1, July 2026 **E-ISSN: 2583-0481**
MLA, DOAJ Indexed

Values of Love Shown in the Periyapuranam and the Naladiyar from a Comparative Perspective

Mrs. M. Nagalakshmi, PhD Research Scholar (P6055), Mannar Thirumalai Nayakkar College, Pasumalai, Affiliated to Madurai Kamaraj University, Madurai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0003-3133-8082
Dr. K. Devi Bhuma, Assistant Professor of Tamil, Mannar Thirumalai Nayakkar College, Pasumalai, Affiliated to Madurai Kamaraj University, Madurai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0001-5708-1890
DOI: 10.5281/zenodo.21791204

Abstract

The objective of this study is to examine the similarities, differences and differences in the concepts of love in the two literatures of Periyapuranam and Naladiyar and how they are relevant to today's social life and human thought. Though Periyapuranam and Naladiyar differ in time and religious background, both consider love as the highest value of human life n Naladiyar, the values of love are studied in the form of compassion, charity, non-harm to others, discipline, gratitude, humanity, while in the Periya Puranam, the values of love are studied in terms of love for God, love shown to servants and love for living beings. In Naladiyar, the values of love are examined in the form of compassion, charity, non-harm to others, discipline, gratitude, humanity, while in the Periya Puranam, the values of love are expressed in the form of love for God, love shown to servants and love for living beings. Periyapuranam and Naladiyar are taken as the source of the article. Evidence is given in the form of footnotes.

Keywords: *Periyapuranam*, *Naladiyar*, Analogy, Love, Values.

References

[1] *Pathinen Kilkkanakku Noolgal Mulamum Uraiyum*. Varthamanan Pathippagam, 2022.
[2] Madurai Muthaliyar, Ku., commentator. *Naladiyar*. Monarch Graphics, 2009.
[3] Mohan, Ira. *Oppiyal Sinthanaigal*. Manivasagar Pathippagam, 2004.
[4] Sakunthalai, Sa. *Periya Puranam Eliya Vasanam*. Mangai Veliyitu, 2010.
[5] Thiru.Vi.Ka. *63 Nayanmar*. Manivasagar Noolagam, 2010.
[6] Arunachalam, Pa., Doctor. *Bhakthi Ilakkiyam*. Maheen Printers, 2014.
[7] Natarasan, Pi.Ra., Pulavar. *Thiruthondar Puranam Ennum Periya Puranam Mulamum Uraiyum Muthal Paguthi*. Uma Pathippagam, 2012.
[8] Natarasan, Pi.Ra., Pulavar. *Thiruthondar Puranam Ennum Periya Puranam Mulamum Uraiyum Irandam Paguthi*. Uma Pathippagam, 2012.
[9] Natarasan, Pi.Ra., Pulavar. *Thiruthondar Puranam Ennum Periya Puranam Mulamum Uraiyum Moonram Paguthi*. Uma Pathippagam, 2012.
[10] Natarasan, Pi.Ra., Pulavar. *Thiruthondar Puranam Ennum Periya Puranam Mulamum Uraiyum Nankam Paguthi*. Uma Pathippagam, 2012.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: Nil
Author Declaration: Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

ஒப்பியல் நோக்கில் பெரியபுராணமும் நாலடியாரும் காட்டும் அன்பின் விழுமியங்கள்

திருமதி மா. நாகலட்சுமி, முனைவர் பட்ட ஆய்வாளர் (P6055), மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெற்றது, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-3133-8082
முனைவர் கோ.தேவி பூமா, உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெற்றது, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-5708-1890
DOI: 10.5281/zenodo.21791204

ஆய்வுச் சுருக்கம்

மனித வாழ்வின் மிக முக்கிய பண்புகளில் தலையாயது அன்பு ஆகும். மனிதனை மனிதனாக்கும் உயரிய விழுமியங்களுள் முதன்மையானது அன்பு. பெரியபுராணமும் நாலடியாரும் காலத்தாலும் சமயப் பின்னணியாலும் வேறுபட்டிருந்தாலும், இரண்டும் அன்பை மனித வாழ்க்கையின் உயர்ந்த விழுமியமாகக் கருதுகின்றன. ஒப்பியல் ஆய்வு என்பது இரண்டு இலக்கியங்களில் இடம்பெறும் கருத்துகளை ஒப்பிட்டு, அவற்றின் ஒற்றுமை, வேற்றுமை மற்றும் தனித்துவங்களை ஆராய்வதாகும். நாலடியாரில் அன்பின் விழுமியங்களை இரக்கம், ஈகை, பிறர்க்குத் தீங்கு செய்யாமை, ஒழுக்கம், நன்றியுணர்வு, மனிதநேயம் என்ற வகையிலும் பெரியபுராணத்தில் அன்பின் விழுமியங்களை இறைவனிடத்தில் வைத்துள்ள அன்பு, அடியார்களிடத்தில் காட்டப்படும் அன்பு உயிர்களிடத்திலான அன்பு என்ற வகையிலும் ஆராய்ந்து கட்டுரை படைக்கப்பட்டுள்ளது. கட்டுரையின் மூல ஆதாரமாகப் பெரியபுராணமும், நாலடியாரும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விரு இலக்கியங்களில் காணப்படும் ஒப்பியல் செய்திகள் தொகுப்புரையாகவும் முடிவுரையாகவும் கொடுக்கப்பட்டுள்ளன. சான்றாதாரங்கள் அடிக்குறிப்புகளாக தரப்பட்டுள்ளன. பெரியபுராணம், நாலடியார் இரு இலக்கியங்களிலும் இடம்பெறும் அன்பின் கருத்துகள், இன்றைய சமூக வாழ்வுக்கும் மனிதநேய சிந்தனைக்கும் எவ்வாறு பொருந்துகின்றன என்றும் அன்பைப் பற்றி கூறும் கருத்துகளில் காணப்படும் ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை ஒப்பியல் நோக்கில் ஆராய்வதும் இந்த ஆய்வின் நோக்கமாகும்.

குறிப்புச்சொற்கள்: *பெரியபுராணம்,* நாலடியார், ஒப்பியல், அன்பு, விழுமியங்கள்.

முன்னுரை

மனித வாழ்வின் மிக முக்கிய பண்புகளில் தலையாயது அன்பு ஆகும். மனிதனை மனிதனாக்கும் உயரிய விழுமியங்களுள் முதன்மையானது அன்பு. அன்பில்லாத வாழ்க்கை உயிரற்ற உடலைப் போன்றதாகும். இவ்வுலகில் வாழும் அனைத்து உயிருள்ள ஜீவன்களையும் இயங்கச் செய்வது அன்பேயாகும். அன்பானது மனிதர்களிடையே ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகியவற்றை வளர்க்கிறது. குடும்பம், சமூகம், நாடு ஆகிய அனைத்தும் அன்பின் அடிப்படையிலேயே இயங்குகின்றன. பெரியபுராணமும் நாலடியாரும் காலத்தாலும் சமயப் பின்னணியாலும் வேறுபட்டிருந்தாலும், இரண்டும் அன்பை மனித வாழ்க்கையின் உயர்ந்த விழுமியமாகக் கருதுகின்றன. பெரிய புராணம், நாலடியார் இரண்டிலும் அன்பின் வெளிப்பாடு எவ்வாறுள்ளது என்பதை ஒப்பியல் நோக்கில் இக்கட்டுரையில் காண்போம்.

அன்பின் வரையறை

அன்பு என்பது உணர்ச்சி மற்றும் மனநிலை சார்ந்த பல்வேறு வகையான உணர்வுகளையும் அனுபவத்தையும் குறிக்கிறது. மனிதநேயம் ,இரக்கம், பாசம் ஆகியவற்றை

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

குறிக்கும் ஒரு நல்லொழுக்கமே அன்பு எனப்படுகிறது. மேலும், மற்றவர்களின் நலனுக்காக காட்டப்படும் தன்னலமற்ற தியாகம் கொண்ட ஒழுக்கமான மனநிலையையும் அன்பு என்று கூறலாம். சக மனிதர்களிடம் மட்டுமல்லாமல் உயிருள்ள மற்ற ஜீவன்களிடம் காட்டப்படும் கருணை மற்றும் பாச செயல்களையும் அன்பு என்று கூறலாம். தமிழ் இலக்கியங்கள் அன்பை அறத்தின் ஆணிவேராக கருதுகின்றன. திருவள்ளுவர்,

அன்பின் வழியது உயிர்நிலை அஃ திலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு (திருக்குறள் -இல்லறவியல், 80)

அன்பே உயிர் வாழ்வின் அடிப்படையாகும். அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர் நின்ற உடம்பாகும் அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பை தோல் போர்த்திய வெற்றுடம்பேயாகும் என்று வலியுறுத்துகின்றார். திருமூலர்,

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே (திருமந்திரம்-முதல் தந்திரம், பா. 270)

அன்பு, சிவம் இரண்டும் வேறு என்று கூறுபவர்கள், அறிவில்லாதவர்கள். அன்பு தான் சிவமாக மாறுகிறது என்ற உண்மையை அறியாதவர்கள், உலகில் எவரும் இல்லை. அன்பு தான் சிவம் என்று உணர்ந்து கொண்டவர்கள், இந்த உலகத்தில் அன்பே வடிவாகவும், சிவமயமாகவும் வாழ்ந்து இன்பம் அடைவார்கள் என்று அன்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றார்.

அன்பின் நோக்கம்

மனித வாழ்க்கையில் 'நான்' என்ற நிலையைக் கடந்து 'நாம்' என்ற நிலையை அடைவதற்கும் தனக்கென மட்டும் வாழாமல் பிறர்க்கென வாழும் பக்குவத்தை ஏற்படுத்தி மனதை அறநெறியில் நிலைநிறுத்தி சமூகத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவே அன்பின் நோக்கமாகும் என்று நாலடியாரும், இறைவன் மீதான அன்பு, சிவனடியார் மீது கொண்ட பாசம், உயிர்கள் மீதான கருணை, இறைவனை அடைவதற்கான வழி, பக்தியின் உச்சநிலை என்று பெரியபுராணமும் எடுத்துரைக்கிறது. இவ்விரு நூல்களும் அன்பை மனித வாழ்வின் உயரிய விழுமியமாக கருதுகின்றன.

தமிழர் பண்பாட்டில் அன்பின் இடம்

தமிழர் பண்பாட்டில் அன்பானது அடித்தளமாகவும் மனித வாழ்க்கையின் அனைத்து உறவுகளையும் இணைக்கும் பாலமாகவும் குடும்பம், சமூகம், நாடு ஆகிய அனைத்தையும் இணைக்கும் உன்னத பண்பாகவும் முக்கியப் பங்கு வகிக்கிறது. அன்பு இல்லாத வாழ்க்கை அறமற்ற வாழ்க்கையாகக் கருதப்படுகிறது. சங்க இலக்கியங்கள் முதல் பக்தி இலக்கியங்கள் வரை அன்பு உயர்ந்த வாழ்க்கை நெறியாகப் போற்றப்படுகிறது. அக இலக்கியங்களில் காதல் வாழ்வின் மையமாகவும், புற இலக்கியங்களில் மனிதநேயம், ஈகை, விருந்தோம்பல், வீரம் போன்றவற்றின் அடிப்படையாகவும் அமைகிறது. புறநானூற்றில்,"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கணியன் பூங்குன்றனாரின் சிந்தனை, எல்லா மனிதர்களையும் உறவினராகக் கருதும் தமிழர் பண்பாட்டின் உயர்ந்த மனிதநேயக் கொள்கையை வெளிப்படுத்துகிறது. பெரியபுராணத்தில் அன்பு இறைவன் மீதான பக்தியாகவும், சிவனடியார்கள் மீதான சேவையாகவும் வெளிப்படுகிறது. நாலடியார் அன்பை அறநெறி, ஈகை, இரக்கம், ஒழுக்கம் ஆகியவற்றின் வழியாக விளக்குகிறது. இதனால் அன்பு தமிழர் பண்பாட்டில் ஒரு தனிப்பட்ட உணர்வாக இல்லாமல், சமூக ஒற்றுமை, அறவாழ்வு, ஆன்மிக உயர்வு ஆகியவற்றின் அடிப்படையாக விளங்குகிறது.

வாழ்க்கையை உயர்த்தும் அறநெறி

நாலடியார் அன்பை மனிதனை அற நெறியில் நிலை நிறுத்தும் அடிப்படை பண்பாகக் கருதுகிறது. ஈகை,மனிதநேயம், இரக்கம், பிறர்க்குத் தீங்கு செய்யாமை, ஒழுக்கம், நன்றியுணர்வு

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

போன்றவை அன்பின் வெளிப்பாடுகளாகவும் வாழ்க்கையை உயர்த்தும் அறநெறியாகவும் சுட்டிக் காட்டுகிறது.

ஈகை

குற்றமற்ற அறவழியில் ஈட்டிய பொருளை பலருடன் பகிர்ந்து வாழ வேண்டும் என்பதை,

துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக் கால் தொட்டுப்
பகடு நடந்த கூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும். (நாலடியார்- செல்வம் நிலையாமை, பா. 2)

பெரும் பொருளை சேர்த்து வைத்திருப்பவர்கள் அதை பிறருக்கு கொடுத்து வாழ வேண்டும் என்பதை,

இழைத்தநாள் எல்லை யிகவா பிழைத்தொரீஇக்
கூற்றம் குதித்துயர்ந்தார் ஈங்கில்லை -ஆற்றப்
பெரும் பொருள் வைத்தீர்வழங்குமின் நாளைத்
தழீஇம் தழீஇம் தண்ணம் படும். (நாலடியார்- செல்வம் நிலையாமை, பா. 6)

நம்மை அழிக்கும் நோய்களும் முதுமைப் பருவமும் இறக்கும் நாளும் பின் தொடர்வதால் நாம் நல்வழியில் ஈட்டிய பொருளை இறுகப் பிடித்துக் கொண்டு வாழாமல் பலருக்கும் பகுத்துக் கொடுத்து உண்ணுங்கள் என்பதை "பற்றன்மின் பாத்துண்மின்" நாலடியார்- ஈகை 92 ஆவது பாடல் நாள்தோறும் உங்களால் இயன்ற அளவு பிறருக்கு கொடுத்து பின் உண்ணுங்கள் என்பதை "நும்மில் இயைவ கொடுத்துண்மின்" நாலடியார்- ஈகை 94வது பாடல் பிறருக்கு கொடுத்து வாழ்பவர்களை ஊரில் நடுவில் இருக்கும் பெண் பனை மரத்திற்கு ஒப்பாகவும் அவ்வாறு கொடுக்காதவர்கள் அனைவராலும் வெறுக்கத்தக்க சுடுகாட்டில் உள்ள ஆண் பனை மரத்திற்கு ஒப்பாகவும் கூறப்பட்டுள்ளது.

நடுவூருள் வேதிகை சுற்றுக் கோள் புக்க
படுபனை அன்னர் பலர்நச்ச வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணும் கொடுத்துண்ணா மாக்கள்
இடுகாட்டுள் ஏற்றைப் பனை." (நாலடியார்- ஈகை, பா. 96)

மனித நேயம்

மனிதநேயம் என்பது சக மனிதரிடத்தில் செலுத்தக்கூடிய அன்பு, பரிவு, அக்கறை, உதவுதல் ஆகியவை ஆகும். பிற மனிதர்கள் துன்பப்படும் வேளையில் தக்க நேரத்தில் உதவி செய்தல் வேண்டும். பிற மனிதர்களின் துன்பம், மகிழ்ச்சி, உணர்வுகள் மற்றும் தேவைகளை புரிந்து கொண்டு அன்பு, கருணை, இரக்கம், மரியாதை மற்றும் உதவும் மனப்பான்மையுடன் நடந்து கொள்வதே மனித நேயமாகும். நாலடியாரில் பிற உயிர்களிடத்தில் மிகுதியாக அறம் செய்து அருளுடையவராக ஆகுங்கள் அவ்வாறு அறம் செய்யாதவர்கள் மக்களாகப் பிறந்தும் பிறவாதவரே ஆவாரென்று கூறுவதிலிருந்து மனித பிறவியைப் பெற்றவர்கள் பிறருக்கு உதவி அருள் உடையவராக ஆதல் அவசியம்.

தோற்றம்சால் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்றம் அளந்துநும் நாளுண்ணும் -ஆற்ற
அறஞ்செய்து அருளுடையீர் ஆகுமின் யாரும்
பிறந்தும் பிறவாதார் இல். (நாலடியார்- செல்வம் நிலையாமை, பா. 7)

பெருஞ்செல்வம் கிடைத்தவுடன் அதை தமக்காக மட்டும் வைத்துக் கொள்ளாமல் பலருடன் பகிர்ந்து உணவு உண்ண வேண்டும். ஏனெனில் செல்வம் நிலையானது அல்ல வண்டிச்சக்கரம் சுழல்வது போல் அது ஒருவரிடம் இருந்து மற்றொருவரிடம் மாறிக்கொண்டே இருக்கும். இந்த

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

பாடல் பசியால் வாடுபவர்களுக்கு உணவு அளிப்பதும், செல்வத்தை பகிர்ந்து வாழ்வதும் மனிதனின் உயர்ந்த அறம் ஆகும் என்பதை வலியுறுத்துகிறது.

இரக்கம்

அன்பின் உயிர்நாடியாகவும் மிக முக்கியமான வெளிப்பாடாக இரக்கம் கருதப்படுகிறது. பிறரின் துன்பத்தைக் கண்டு மனம் உருகுதல், இயன்றவரை உதவி செய்தல், உயிர்களை மதித்தல் ஆகியவை இரக்கத்தின் அடையாளங்களாகும். நாலடியார் மனிதன் கருணைமிக்கவனாக இருக்க வேண்டுமென்றும் கருணையற்ற செல்வமும் அறிவும் முழுமையான வாழ்க்கையை உருவாக்காது என்பதை எடுத்துரைக்கிறது.நம் கண்முன்னே துன்பப்படுபவர்களின் தேவையை அறிந்து தாமதமின்றி உதவி செய்பவர்கள் அடையும் புகழானது ஒன்றின் மேல் ஒன்றாக உள்ள மூவுலகங்களில் உள்ளாறும் கேட்பார்கள். இதனை,

கடிப்பிடு கண்முரசம் காதத்தோர் கேட்பர்
இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பார்
அடுக்கிய மூவுலகும் கேட்குமே சான்றோர்
கொடுத்தார் எனப்படுஞ் சொல் (நாலடியார்- ஈகை, பா. 100)

நாம் பிறருக்கு தருவது மிகவும் சிறியது என்று கருதாது, இல்லை என்று சொல்லாமல் எப்போதும் தேவை உடையவருக்கு தாமதம் இன்றி உதவும் போது மெல்ல மெல்ல புண்ணிய பயன் விரைவில் வந்து சேரும். தேவை உடையவருக்கு கொடுத்து தானும் அனுபவித்தாலும் பொருள் சேரும் காலத்தில் சேரும் மற்றவர்களுக்கு கொடுக்காமல் பொருளை மட்டும் நம்மிடத்தில் சேர்த்தால் நல்வினை தொலைந்த போது அப்பொருளை எவ்வளவு தான் இறுக்கிப்பிடித்தாலும் நில்லாமல் நீங்கிவிடும். இதனை உணர்ந்து கொண்டவர்கள் வறுமையால் வாடுபவர்களின் துன்பத்தை இரக்கத்தோடு களைவர். இதனை

நடுகுற்றுத் தற்சேர்ந்தார் துன்பம் துடையார்
கொடுத்துத் தான் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்
மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக்கால் (நாலடியார்-ஈகை, பா. 93)

பிறர்க்குத் தீங்கு செய்யாமை

நாலடியார் அறநெறியின் முக்கிய கூறாக பிறருக்குத் தீங்கு செய்யாமையை வலியுறுத்துகிறது. பிறருக்கு நன்மை செய்ய முடியாவிட்டாலும், தீமை செய்யாமல் இருப்பதே உயர்ந்த அறமாகும். உண்மையான அன்பானது பிறரைப் புண்படுத்தாமல் மாறாக அவர்களின் நலனையே விரும்பும். உலகில் வாழும் எவ்வுயிருக்கும் தீங்கு செய்யாது வாழ வேண்டும். தீங்கு செய்பவர்கள் துன்பமடைவர் என்று கூறுவதிலிருந்து எல்லா உயிர்களிடத்திலும் அன்பு கொண்டு வாழ வேண்டும் என்பது தெரியலாகிறது.

ஒழுக்கம்

ஒழுக்கம் என்பது அன்பின் செயல்முறை வடிவமாகும். ஒழுக்கமுள்ள மனிதன் பிறரை மதித்து நடப்பான். சமுதாய ஒற்றுமையை நிலைநிறுத்தும் பண்பாக ஒழுக்கத்தை நாலடியார் போற்றுகிறது.அன்பு, பணிவு, பொறுமை, ஒழுக்கம் ஆகியவை ஒன்றோடொன்று இணைந்த பண்புகளாக நாலடியாரில் வெளிப்படுகின்றன.

அன்பின் மூன்று நிலைகள்

பெரியபுராணத்தில் அன்பின் விழுமியங்களை இறைவனிடத்தில் வைத்துள்ள அன்பு, அடியார்களிடத்தில் காட்டப்படும் அன்பு உயிர்களிடத்திலான அன்பு என மூன்று நிலைகளாக அறியலாம். பெரியபுராணத்தின் அடிப்படைக் கருத்து இறையன்பாகும். நாயன்மார்கள் தங்களது உடல், பொருள், உயிர் அனைத்தையும் இறைவனுக்காக அர்ப்பணித்தனர். இவ்வன்பு எதிர்பார்ப்பற்ற தூய அன்பாக விளங்குகிறது.

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

இறையன்பு

கண்ணப்ப நாயனார் கல்வியறிவு இல்லாத வேடராக இருந்தாலும், சிவபெருமானிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்தார். வேட்டையாடி கிடைத்த இறைச்சியையும், தாம் வாயில் வைத்துத் தூய்மைப்படுத்திய நீரையும் இறைவனுக்குப் படைத்தார். சிவலிங்கத்தின் கண்களில் இரத்தம் வந்தபோது தமது ஒரு கண்ணையும், பின்னர் மற்றொரு கண்ணையும் அர்ப்பணிக்க முனைந்தார்.

உருகிய அன்பு ஒழிவு இன்றி
நிறைந்தஅவன் உரு என்னும்
பெருகியகொள் கலமுகத்தில் பிறங்கி
இனிது ஒழுகுதலால்
ஒருமுனிவன் செவி உமிழும்
உயர்கங்கை முதல்தீர்த்தப்
பொருபுனலின் எனக்கு அவன்தன்
வாய்உமிழும் புனல் புனிதம் (கண்ணப்ப நாயனார் புராணம்-பா. 159)

கண்ணப்பரின் வாழ்க்கை, பக்தி என்பது சடங்குகளை விட அன்பே உயர்ந்தது என்பதை உணர்த்துகிறது.

அடியாரன்பு

பசியால் வாடுபவர்களுக்கு உணவு அளிப்பதை பெரியபுராணம் பல நாயன்மார்களின் வாழ்க்கையின் மூலம் வலியுறுத்துகிறது. குறிப்பாக இளையான்குடி மாறநாயனார் அவர்களின் வரலாறு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

நமக்கு முன்புஇங்கு உணவு இலை ஆயினும்
இமக் குலக்கொடி பாகர்க்கு இனியவர்
தமக்கு நாம் இன் அடிசில் தகவுஉற
அமைக்கு மாறு எங்ஙனே?அணங்கே என (இளையான் குடி மாற நாயனார் புராணம், பா. 11)

நமக்கு உணவு இல்லாவிட்டாலும் நம் இல்லத்திற்கு வந்துள்ள சிவனடியார்களுக்கு முதலில் உணவு படைப்பதே நமது கடமை எனவும் பசியோடு வந்தவருக்கு உணவளிப்பதே உயர்ந்த சிவத்தொண்டு வீட்டில் உணவு இல்லாத நேரத்திலும் விதைக்கு வைத்திருந்த நெல்லை எடுத்து அடியவர்களுக்கு அமுது படைத்தார். அப்பூதியடிகள் திருநாவுக்கரசரை நேரில் காணாத போதிலும், அவர்மீது அளவற்ற அன்பு கொண்டிருந்தார். தன் இல்லம், மகன்கள், அறச்சாலைகள் அனைத்திற்கும் "திருநாவுக்கரசர்" என்ற பெயரையே சூட்டினார். மகன் பாம்பு கடித்து இறந்த நிலையிலும், முதலில் திருநாவுக்கரசருக்கு விருந்தளிக்கும் கடமையை நிறைவேற்றினார்.

கடிது வந்து அமுது செய்யக்
காலம் தாழ்கின்றது என்றே
அடிசிலும் கறியும் எல்லாம்
அழகுற அணைய வைத்துப்
படியில் சீர்த் தொண்டனார் முன் பணிந்து
எழுந்து அமுது செய்து எம்
குடிமுழுவதும் உய்யக் கொள்வீர்
என்று அவர் கூறக்கேட்டு (அப்பூதியடிகள் நாயனார் புராணம், பா. 31)

பெரியபுராணத்தில் சிவபெருமானின் அடியார்களைப் போற்றுவது இறைவனைப் போற்றுவதற்கு இணையாகக் கருதப்படுகிறது. அடியார் மீதான அன்பு தனிப்பட்ட துயரத்தையும் தாண்டிய உயர்ந்த பண்பாகச் சித்தரிக்கப்படுகிறது.

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

உயிர்களிடத்தான அன்பு

பெரியபுராணம் மனிதர்களிடம் மட்டுமன்றி அனைத்து உயிர்களிடமும் கருணையுடன் நடக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறது. இறைவனை நேசிப்பவன் உயிர்களையும் நேசிக்க வேண்டும் என்ற சைவச் சித்தாந்தக் கருத்து பெரியபுராணம் முழுவதும் வெளிப்படுகிறது.

அன்பு வெளிப்படும் இடங்கள்

பெரியபுராணத்தில் அன்பு வெளிப்படும் இடங்களாக விருந்தோம்பல் தியாகம் ஒற்றுமை ஆகியவை அமைந்துள்ளன.விருந்தோம்பல் என்பது வெறும் மரபு அல்ல; அது அன்பின் செயல்பாடு என்பதை அமர் நீதியார் வாழ்க்கையின் மூலம் அறியலாம்.

விருந்தோம்பல்

"செல்வத்து பயனே ஈதல்" என்ற கொள்கையை கொண்டு சோழ நாட்டில் பழையறை என்னும் ஊரில் வணிக குலத்தில் பிறந்த அமர் நீதியார் தேவை உடையவர்களுக்கு தேவைப்படும் நேரத்தில் கந்தை, கீழுடை, கோவணம் முதலியவற்றை கொடுத்து வந்தார். திருவள்ளூரில் மடம் ஒன்று கட்டி அதில் சிவனடியார்களுக்கு உணவளித்தல் முதலிய தொண்டுகளையும் செய்து வந்தார்.சிவனடியாரின் கோவணம் தொலைந்துவிட அதற்கு பதிலாக மற்றொரு கோவணத்தின் எடைக்கு நிகராக தன்னையும் தன் குடும்பத்தினரையும் அர்ப்பணிக்கும் செயல் அன்பின் உச்சகட்டமாக அமைகிறது.

நிலைமை மற்றது நோக்கிய நிகர்
இலார் நேர் நின்று
உலைவில் பஃறனம் ஒன்று
ஒழியாமை உய்த்து ஒழிந்தேன்
தலைவ யானும் என்
மனைவியும் சிறுவனும் தகுமேல்
துலையில் ஏறிடப் பெறுவது உன்
அருள் எனத் தொழுதார் (அமர்நீதி நாயனார், பா. 40)

தியாகம்

சிவபெருமான் அடியார் வேடத்தில் வந்து மனித இறைச்சி கேட்டபோது, தன் மகனையே அர்ப்பணிக்கத் தயங்காதவர் சிறுத்தொண்டர்.

யாதும் அரியது இல்லை இனி
ஈண்ட அருளிச்செய்யும் என
நாதன் தானும் ஓர்குடிக்கு
நல்லசிறுவன் ஒரு மகனைத்
தாதை அரியத்தாய் பிடிக்கும்
பொழுதில் தம்மில் மனம் உவந்தே
ஏதம்இன்றி அமைத்த கறி
யாம்இட்டு உண்பது என மொழிந்தார் (சிறுத்தொண்டர் நாயனார் புராணம், பா. 51)

சோழநாட்டில் திருச்செங்கட்டாங்குடியில் மா மாத்திரர் குலத்தில் பிறந்தவர் சோழ மன்னனின் படைத்தளபதி பரஞ்சோதி. இவர் தினமும் ஒரு சிவனடியாரை உணவு உண்ணச் செய்து பின்பு தான் உண்ணுவார் சிவபெருமான் உத்திராபதியராக வேடம் பூண்டு சிறுத் தொண்டர் இல்லத்திற்கு வந்து ஒரு தாய்க்கு ஒரு மகனாக அங்கம் பழுதில்லா ஐந்தாண்டு நிரம்பிய மகனை அறுத்து கறி சமைத்து படைத்தாள் உண்பேன் என்ற நிபந்தனையை ஒப்புக்கொண்டு வந்திருந்தவரின் தேவை அறிந்து தாமதம் இன்றி தன் மகன் சீராளனை அறுத்து சமைத்து பரிமாறினார். இந்நிகழ்வு சாதாரண மனித உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட பக்தியையும் தியாக

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

அன்பையும் எடுத்துரைக்கிறது.இறைவன் மீதான அன்பு தன்நலத்தை விட உயர்ந்தது என்பதை வலியுறுத்துகிறது.

ஒற்றுமை

பெரியபுராணத்தில் பல்வேறு சமூகப் பின்னணிகளைச் சேர்ந்த நாயன்மார்கள் இடம்பெறுகின்றனர். அரசர், வேளாளர், வேடர், வணிகர், குயவர், பாணர், பெண்கள் இவர்கள் அனைவரையும் சிவபெருமான் சமமாக ஏற்றுக்கொள்கிறார். உயர்வு–தாழ்வு பாராமல் அனைவரையும் சமமாகக் கருதும் மனப்பான்மை, சமூக ஒற்றுமையை உருவாக்கும் அன்பின் வெளிப்பாடாகும். பெரியபுராணத்தில் அன்பு என்பது பக்தி, தொண்டு, தியாகம், விருந்தோம்பல், ஒற்றுமை, கருணை ஆகிய வடிவங்களில் வெளிப்படுகிறது. இந்நூல் அன்பை உணர்வாக மட்டும் அல்லாமல், செயலாகவும் வாழ்க்கை முறையாகவும் சித்தரிக்கிறது.

ஒப்பியல் செய்திகள்

பெரியபுராணமும், நாலடியாரும் தமிழ் இலக்கிய மரபில் தனித்துவமான இடத்தைப் பெற்ற இரு சிறந்த நூல்களாகும். காலம், சமயம், நோக்கம் ஆகியவற்றில் வேறுபட்டிருந்தாலும், இரண்டும் அன்பை மனித வாழ்வின் உயர்ந்த விழுமியமாக எடுத்துரைக்கின்றன. நாலடியார், அன்பை அறநெறியின் அடிப்படையாகக் கொண்டு, ஈகை, இரக்கம், ஒழுக்கம், பொறுமை, மனிதநேயம் போன்ற பண்புகளின் வழியாக சமூக வாழ்க்கையைச் செம்மைப்படுத்துகிறது. மனிதன் பிறருடன் நல்லிணக்கமாக வாழ வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறது. பெரியபுராணம், அன்பை இறையன்பு, அடியாரன்பு, உயிர்களிடத்தான அன்பு ஆகிய நிலைகளில் வெளிப்படுத்துகிறது. நாயன்மார்களின் வாழ்க்கை நிகழ்வுகள் மூலம் அன்பு என்பது உணர்வு மட்டுமல்ல; அது தியாகம், தொண்டு, பக்தி, விருந்தோம்பல் ஆகியவற்றின் வழியாக செயல்படுத்தப்பட வேண்டிய வாழ்க்கை நெறி என்பதைக் காட்டுகிறது.

முடிவுரை

பெரியபுராணம், நாலடியார் இரு நூல்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாலடியார் உலகியல் அறத்தை மையமாகக் கொண்டது. பெரியபுராணம் சமய அறத்தை மையமாகக் கொண்டது. இருப்பினும், இரண்டின் அடிப்படைச் சிந்தனை அன்பே ஆகும். அன்பு மனிதனை உயர்த்துகிறது. சமூக ஒற்றுமையை உருவாக்குகிறது. இறைநெறிக்கும் அறநெறிக்கும் பாலமாக அமைகிறது. பெரியபுராணமும் நாலடியாரும் காட்டும் அன்பின் விழுமியங்கள். இவை இன்றைய சமூகத்திற்கு வழிகாட்டும் உயர்ந்த வாழ்க்கை நெறிகளாக விளங்குகின்றன.

குறிப்புகள்

[1] *பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும்.* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2022.
[2] கு. மதுரை முதலியார் தெளிவுரை. *நாலடியார்.* மோனார்க் கிராபிக்ஸ், சென்னை, 2009.
[3] இரா.மோகன். *ஒப்பியல் சிந்தனைகள்.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2004.
[4] ச. சகுந்தலை. பெரிய புராணம் எளிய வசனம். மங்கை வெளியீடு, சென்னை, 2010.
[5] திரு. வி. க. *63 நாயன்மார்.* மணிவாசகர் நூலகம், சென்னை, 2010.
[6] டாக்டர் ப. அருணாசலம். *பக்தி இலக்கியம்.* மாஹீன் பிரிண்டர்ஸ், சென்னை, 2014.
[7] புலவர் பி. ரா. நடராசன். *திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் மூலமும் உரையும் முதல் பகுதி.* உமா பதிப்பகம், சென்னை, 2012.
[8] புலவர் பி. ரா. நடராசன். *திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் மூலமும் உரையும் இரண்டாம் பகுதி.* உமா பதிப்பகம், சென்னை, 2012.
[9] புலவர் பி. ரா. நடராசன். *திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் மூலமும் உரையும் மூன்றாம்பகுதி.* உமா பதிப்பகம், சென்னை, 2012.

மலர் 5, சிறப்பிதழ் 1, ஆடி 2057 இ-ஐ.எஸ்.எஸ்.எண்: 2583-0481
எம்.எல்.ஏ., டி.ஓ.ஏ.ஜே. குறியிடப்பட்டது

[10] புலவர் பி. ரா. நடராசன். திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் மூலமும் உரையும் நான்காம் பகுதி. உமா பதிப்பகம், சென்னை, 2012.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.